உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலாம்ருதகீதம்

இது

திரு-அ. சிவாநந்தசாகர யோகீசுவரரின்

மருகரும் மாணவருமாகிய

பாலகவி-திரு-அ. சுப்ரமண்யபாரதி

இயற்றியது

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,

இராயப்பேட்டை P. O.

சென்னை.

[Copy Right] 1919 [விலை அணா 1.

PRINTED AT THE
BRITISH INDIA PRESS, ROYAPETTAH,
MADRAS.



உ

செந்திலாண்டவன்

திருவடிதுணை.

முன்னுரை.

———

பாலாம்ருத சீதம்.—1. இது இனிது முடிவுபெற முன்னின்ற எனது இறைவனாகிய குருநாதனைச் சிந்தித்து அவர் தம் திருவடி மலர் முடி சூடுகின்றேன்.

2. தமது அரிய உபந்யாஸங்களிலே சித்தர்கள் பாடிய சிந்து, கண்ணி, கும்மி முதலிய பாடல்களை எடுத்துக் கல்லும் புல்லும் கனிந்துருகப்பாடி, எனக்கு இந்நூலியற்றக் காரணபூதராய் நின்ற தஞ்சாவூர்-சங்கீதவித்வான்-பிர்ஹ்மஸ்ரீ **என். எஸ். துரைசாமி ஐயர் அவர்கட்கு**, பரிபூர்ணமான ஆயுளையும் இவைபோன்ற பிரஸங்கமாரியைத் தமிழுலகெங்கும் பொழிய, திடசரீரத்தையும் அளித்தருளுமாறு என தாண்டவனாகிய முருகப்பெருமானை முப்பொழுதும் வாழ்த்தி வணங்கும் கடமையை மேற்கொள்கின்றேன்.

3. இதில் அமைந்துள்ள பாடல்கள் யாவும் குழந்தைகள் எளிதிலுணர்ந்து மகிழ்ந்து பாடிப்பாடித் துதிக்கவும் பாடிக் கும்மியடித்து விளையாடவும் ஏற்றபடி மன உருக்கத்துடன் வெளிவந்தன வாகையினால், இப்புத்தகத்தைப் படிக்கவும் பாடவும் பாடிவிளையாடவும் பாக்யம்பெற்ற குழந்தைகள் பரிபூர்ணமான ஆயுளையும் ஆரோக்யத்தையும் ஞானச் செல்வத்தையும் அடையுமாறு பழனியாண்டவனின் திருவருள் பெருகுமென நம்புகின்றேன்.

குமார விலாசம்,
ராயப்பேட்டை, சென்னை,
6—2—19.

இங்ஙனம்:
திரு. அ. சுப்ரமண்ய பாரதி.

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

பாலாமிர்தகீதம்

விநாயகர் வணக்கம்.

சித்திதரும் ஞானச் செழிப்புதவுந் தேடரிய
பத்திதரும் நல்வாழ்வு பாலிக்கும்—அத்தி
முகத்தானை முன்னே முளைத்தானை யன்பர்
அகத்தானை முன்பணிகு வாம்.

காப்புடைக்கடவுள் வணக்கம்.

தீமைக ளகலத் திருவருள் பெருக
மாமுகில் வண்ணன் மலரடி பணிவாம்.

வழிபடுகடவுள் வணக்கம்.

செந்தின் மேவிய கந்த நாதனைச்
சிந்தை செய்குவாம் பந்தம் நீங்கவே

கலைமகள் வணக்கம்.

கலைமகள் கழலிணை மலர்சிர மிசைகொள்
நலமலி தமிழுள நிலைபெறு நிஜமே.

குருவணக்கம்.

இருமையும் நல்கும் பெருமைசால் கல்வித்
திருவெமக் களித்த தேவனைப் பணிவாம்.

மார்கழிமாதந் திருவாதிரைநாள் - மெட்டு.

சரவணபவகுகன் சரணிணைமலரே சரணென நினைமனமே
ஹரஹரசிவசிவ சிவஷண்முகவென அவனையே துதிதினமே
சூரஸம்ஹார வீரமயூரனைத் தொழுமடி யாரிடமே
சேரிடமாமதைச் சேர்ந்திடு வாயெனில் தீவினை யிலதிடமே

தங்கம் பாட்டு - மெட்டு.

1. சிவசுப்ரமண்யனடி—திவ்யலாவண்யனடி
பவபயமற்றநிலை—தங்கமே—பாலிக்குந் தெய்வமடி
2. தென்பழனி வாசனடி—தெய்வானை நேசனடி
அன்பர் தமிழுக்குகந்த—தங்கமே—ஆறுமுகத்தெய்வமடி
3. செந்திலமர் கந்தனடி—சின்மயாநந்தனடி
வந்தனைசெய் சிந்தையிலே—தங்கமே
வந்திருக்குந் தெய்வமடி
4. பன்னிரண்டு கையனடி—பக்தருக்கு மெய்யனடி
தன்னையுணர்ந் துய்யும்நெறி—தங்கமே
தந்தருளுந் தெய்வமடி
5. அம்பொன்மயில் வாகனடி—அற்புதவை போகனடி
நம்பியடி பாடித்தொழத்—தங்கமே—(சிவ)
ஞானமருள் தெய்வமடி

6. சாமிமலே நாதனடி—சங்கரற்கு போதனடி
தீமையற்ற தூய்மைபெறத்—தங்கமே
திருவருள்செய் தெய்வமடி

7. பாலேயுமை பாலனடி—பார்புகழும் சீலனடி
பாலும் பழமுமெனத்—தங்கமே—பழகநல்ல தெய்வமடி

8. வள்ளிமண வாளனடி—மாமரைப்பூந் தாளனடி
கள்ளவினேப் பந்தமறத்—தங்கமே
காட்சியருள் தெய்வமடி

9. சூரஸம்ஹாரனடி—தீரவுதாரனடி
கோருமடி யாரிடமே—தங்கமே
குடிகொள்ளும் தெய்வமடி

10. சைவகுல தீபமடி—சற்குணமெய் ரூபமடி
கைகுவிக்க மெய்விளக்கம்—தங்கமே
காட்டியருள் தெய்வமடி

11. திருமால் மருகனடி—சேவை தருவனடி
ஒருகால் முருகாவென்ருல்—தங்கமே
ஓடிவருந் தெய்வமடி

12. சரவணப் பொய்கையிலே—சாமியென வந்தவனே
வரகவி சுப்ரமண்யன்—தங்கமே—வழிபடுந் தெய்வமடி

ஆநந்தக் களிப்பு.

(சங்கர சங்கர சம்போ - என்பது)

யாரறிவாரடிமானே—எங்கள்
அதிசய மானமெய்த் தெய்வத்தைத் தானே (யார)

1. பழனிமலை வடிவேலன்—தொண்டர்
பக்திக்கிரங்கும் பரமாநுகூலன்
அழகிய செந்தமிழ் மூலன்—அவன்
அற்புத சுத்தநித்யாநந்த சீலன் (யார)

2. வஞ்சகம் பொய்சூதுவாது—வீண்
வார்த்தையிற் காலங் கழிக்கும்வெந்தீது (இவை)
அஞ்சிய நெஞ்சகப்போது—பழனி
ஆண்டவன் சிந்தைக் குகந்தமெய்ப்போது (யார)

3. அம்பிகை யுமையவள்நேசன்—மகிழும்
அரிய பிரணவ ஞானோபதேசன்
வம்பவிழ் கடம்பலர்வாசன்—போற்றும்
வரகவி சுப்பிரமண்ய னுக் கீசன். (யார)

(பாம்பாட்டி சித்தர் ஆடுபாம்பே என்பது)

1. ஆடு மயிலே நட மாடு மயிலே—பழனி
ஆறுமுக னேடுவந்திங் காடு மயிலே
கோடிபுண்ய பயனுனக் குண்டுமயிலே—கை
கூப்பித்தொழ ஓடிவந்திங் காடுமயிலே

2. பழனிமலை யாண்டவனைக் காட்டுமயிலே—அவன்
பாதமல ரென்முடிமேற் சூட்டுமயிலே
இழிவோவுனக் கிதெழி லானமயிலே—இல்லை
இல்லையிதை யெண்ணித்தயை பண்ணுமயிலே

3. நல்லார்க்கு நல்லவனென் றாடுமயிலே—குகன்
நல்லவழி காட்டுமென் றாடுமயிலே

பொய்யார்க்குப் பொய்யனென் றாடுமயிலே—சிவ
போதநிலை கூடவந்திங் காடுமயிலே

4. ஓங்காரத் தோகைவிரித் தாடுமயிலே—அதன்
உண்மைகண்ட கந்தனைக்கொண் டாடுமயிலே
ஆங்காரம் நீங்கநட மாடுமயிலே—பர
மானந்த மோங்கவந்திங் காடுமயிலே

5. தொண்டருக்குத் தொண்டனென் றாடுமயிலே—கொடுஞ்
சூரஸம்ஹாரனென் றாடுமயிலே
பண்டைவினை யோட வந்திங் காடுமயிலே—குகன்
பக்திநிலை நிற்கவந்திங் காடுமயிலே

6. அண்டர் புகழ்தென்பழனி ஐயன்மயிலே—நீ
அஞ்செலென்று தஞ்சமருள் செம்பொன்மயிலே
தொண்டன்வரகவிசுப்ரமண்யன் மயிலே—கவி
சொல்லிநலங் கொள்ளவந்திங் காடுமயிலே.

(குதம்பைச் சித்தர் வெட்டவெளிதன்னை என்பது)

1. தெண்டாயுதபாணி தெரிசனம் செய்தார்க்குச்
சிந்தனையுண்டோடி—நங்காய்—சிந்தனையுண்டோடி

2. பழனிமலை யாண்டி பாதம் பணிவார்க்குப்
பாபமுமுண்டோடி—நங்காய்—பாபமுமுண்டோடி

3. கந்தனடித் தொண்டு கைவந்த பேருக்குக்
காமமுமுண்டோடி—நங்காய்—காமமுமுண்டோடி

4. குஞ்சரிநேசனைக் கும்பிடுவோருக்குக்
கோபமுமுண்டோடி—நங்காய்—கோபமுமுண்டோடி

5. உம்பர்சகாயனை நம்பிய பேர்க்கென்றும்
உலோபமுமுண்டோடி—நங்காய்—உலோபமு
முண்டோடி

6. முருகனைப்பாடி யுருகுமனத்திலே
மோகமுமுண்டோடி—நங்காய்—மோகமுமுண்டோடி

7. வள்ளிமணாளனை வழிபடுவோருக்கு
மாமதமுண்டோடி—நங்காய்—மாமதமுண்டோடி

8. மாமயில்வாகனன் நாமம்நவில்வார்க்கு
மாற்சர்யமுண்டோடி—நங்காய்—மாற்சர்யமுண்டோடி

9. ஆறுமுகனருட் பேறுபெற்றார்க்குவீண்
ஆங்காரமுண்டோடி—நங்காய்—ஆங்காரமுண்டோடி

10 சரவணபவனிரு சரணிணைசார்ந்தார்க்குச்
சங்கடமுண்டோடி—நங்காய்—சங்கடமுண்டோடி

12. சூரஸம்ஹாரவை வீரவேல்கண்டார்க்குச்
சோகமுமுண்டோடி—நங்காய்—சோகமுமுண்டோடி

13. வரகவிசுப்பிர மண்யன் தொழுங்குகன்
வைபவம்பொய்யோடி—நங்காய்—வைபவம்!
பொய்யோடி.

காவடிச்சிந்து

தெள்ளுதமிழ்க்குதவு சீலன் என்னுமெட்டு.

1. சிவசுப்ரமண்யமென்று சொல்லு—அவன்
திருவருள் பெறும்வழி நில்லு—வெய்ய

பவபய மற்றிருக்குந் தவமதி பெற்றிருப்ப
தாமே—வினை—போமே.

2. ஆறுமுகனம்பொனடி பாடு—பர
மானந்த வெள்ளந்துளைந் தாடு—துதி
கூறியடி பாடுமன்பர்—கோரும் வரம் நல்குமருள்
கூர்ந்து—நலம்—நேர்ந்து.

3. தொண்டன் வரகவி சுப்ரமண்யன்—கவி
சொல்லவருள் செய்யுங்கா ருண்யன்—புகழ்
கொண்டபழ னித்தலத்தில் கண்டுதொழ வந்துதித்த
கோவே—மெய்த்—தேவே

கிளிக்கண்ணி.

1. சரவண பவனடியே—கிளியே-சரணென நீபிடியே
பரமசுகமாமே—கிளியே—பக்திகை கூடிடுமே

2. பழனித் தரிசனமே—கிளியே பண்ணித்துதி தினமே
அழலிற்பொரியாமே—கிளியே—அஞ்ஞானமென்பதுவே

3. பச்சைமயில் வாகன்—கிளியே—பார்புகழ் வைபோகன்
இச்சையவனிடமே—கிளியே—வைச்சிடுவாய்திடமே

4. நன்மைகடைப்பிடிப்பாய்—கிளியே—ஞானங்கை
கொண்டிடுவாய்
ஞானங்கை வந்திடவே—கிளியே—நாயகனருள் வருமே

5. செந்திற் சினகரத்தே—கிளியே—சிவாநந்தத்தெள்ள
முதை
சந்திக்க வந்திடுமே—கிளியே—சகலசௌபாக்யமுமே

6. ஏரகமலையானைக் — கிளியே — இன்பமலையானை
பாரதி தொழுவானைக் — கிளியே — பாடப் பழகுவையே.

குறம்.

மனத்திலுனை நினைத்துத்தொழும் வழியறியேன் முருகா
வஞ்சகநெஞ் செண்ணம்பல கொஞ்சமல முருகா
வினைப்பகையை வெல்லுநெறி மேவுகிலேன் முருகா
வேதமுத லானகலை ஓதியிலேன் முருகா
உனக்கினிய அடியவரின் உறவுமிலேன் முருகா
உன்கருணை பெறுவதற்கோர் உறுதியிலேன் முருகா
வனக்குறவர் உறவுகொண்ட மலைப்பழனி முருகா
மைந்தன்சுப்ர மண்யன் மகிழ் சிந்தையில் வாழ் முருகா

தாந்திமித்திமி தந்தக்கோனோ — தீந்திமித்திமி
திந்தக்கோனோ

1. குஞ்சரி நேசனைக் கும்பிடுவோமே
குற்றமோர்மூன் றுக்கு மம்பிடுவோமே
தஞ்சமவனையே சார்ந்திடுவோமே
சாந்தகுணமலை சேர்ந்திடுவோமே

2. வள்ளிமணாளனை வாழ்த்துவமின்றே
வஞ்சவினைப்பகை வீழ்த்துவமின்றே
உள்ளக் கவலையை யோட்டுவமின்றே
உண்மைத்தவக்கொடி நாட்டுவமின்றே

3. ஊரின ருற்றவர் உறவென்கை வீணே
ஓடுமனமுற வென்பதும் நாணே

பாரதி சொல்வதே பத்தியங் காணே
பாடி முருகனைத் தொழுங்கலன் பூணே.

(இடைக்காட்டுச் சித்தர் சாவாதிருக்கப்பால்கற என்பது)

1. பழனிமலை வடிவேலனே — தமிழ்ப்
பாமணம் கொண்டருள் வேலனே
வழிவழியடிமைகொள் வேலனே — மன
மாயை யொழித்திடும் வேலனே

2. சாமிமலைவடி வேலனே சிவ
சத்தியுமைதந்த வேலனே
ஓமுறை செய்தருள் வேலனே — தொடர்
ஊழ்வினை தீர்த்திடும் வேலனே

3. தணிகைமலை வடி வேலனே — தெய்வ
ஸத்தியங் காட்டிடும் வேலனே
பணிவிடை கொண்டருள் வேலனே — உன்
பாத முடித்தருள் வேலனே

4. சீரலைவாய் வடிவேலனே — ஜெக
ஜீவபரமான வேலனே
யாரறிவாருனை வேலனே — உன்றன்
அன்புகொண்டால்லன்றி வேலனே

5. திருப்பரங் குன்றவை வேலனே — மறை
தேடியறியாத வேலனே
விருப்பு வெறுப்பிலா வேலனே — மலர்
வேதனைக்குட்டிய வேலனே

6. சமரபுரி வடிவேலனே —ஞான
சம்பந்தனுய் வந்த வேலனே
இமையவர் போற்றிடும் வேலனே—தமிழ்
இன்பங்கொள் பாரதி வேலனே.

(பராபரக்கண்ணி மெட்டு)

1. நாதா குமாரா நமவென்று போற்ருதார்
தீதான வினையொழிந்து தென்பழனி காண்பதுண்டோ
2. கோல மயிலேறுங் குமரனடி போற்ருத
ஞாலமிசை யுண்டோடி ஞானே தயங்தேனே
3. கொண்ட கணவனடி கும்பிடாக் கோதையர்க்கு
அண்டர் புகழ்பழனி யருட்செல்வ முண்டோடி
4. கற்பமமைந்த நல்லார் கைகுவிக்கு மக்கணமே
அற்புதப்பொன் மயில்வீரன் அருட்சேவை யாகுமடி
5. சிந்திக்கச் சிந்திக்கத் தித்திக்குந் தீங்கரும்பாம்
செந்திற் சினகரத்துச் சிவமேயென் தெய்வமடி
6. தெய்வவடி வேல்பிடித்த சிவகுருவின்கால் பிடித்தால்
மெய்வடிவம் காட்டிவெளி வீட் டின்பம் காட்டுமடி
7. ஆறு பெருகி யலைகடலிற் சார்வதுபோல்
ஆறு முகனிடமே அன்பு பெருகுதடி
8. கண்ணீர் பெருகுதடி கந்தனடி நினைத்தால்
(என்) உண்ணீர்மை கண்டவனுமுவகைகொண்ட தண்மையடி
9. முருகா திருமால் மருகா வெனவுருகும்
ஒருகாதலுமுதெனக்குக் குருநாதன் தந்தாண்டி

10. தந்தகுரு நாதனுள்ளந் தன்மகனின் புகழ்கேட்ட
தந்தையுளம் போல்மகிழச் சாமியருள் செய்தாண்டி
11. செய்த திருவருளைச் சிந்தித்திவ் வேழைமுன்னே
செய்ததவ மறியச் சிந்தித்தேன் கந்தனையே
12. சிந்தித்த சிந்தையிலே சிங்கார வைவேலன்
வந்துநடஞ் செய்துமன மயலேக நின்றானே
13. நின்று வரகவிநீ நின்குருவை மறவாத
நன்றித் தவமெனவே நவின்றுகுகன் சென்றாண்டி

கும்மி.

1. பாவுக்கழகு பழனி முருகனைப்
பாடுவதா மென்று பாடியிந்த
நாவுக் கழகவன் நாமத்தை யெப்போதும்
நாவில் தாமென்று கும்மியடி
2. செய்யத் தக்கது தீதற்ற தென்னுமெய்
தெரிந்து கொண்டவர் சிந்தையிலே
ஐயந் திரிபறி யாமை யண்டாவகை
ஆறுமுக னருள் கூடுமெடி
2. விலக்கத் தக்கது விண ருறவென்னும்
மேலோ ருபதேச மெய்மைகண்டால்
அலக்கண் செய்திடும் அஞ்ஞானம் நீங்கிட
ஆறுமுகன் சேவை யாகுமடி
4. எழுத்தறி வித்த இறைவ னருள்மொழி
எண்ணி நடப்பவர் எண்ணத்திலே

தழைத்துச் செழித்த தனியறிவே சிவ
ஷண்முக மாமடி பைங்கிளியே

5. பண்ணிய புண்ணியமே நட்பாமுன்பு
பண்ணிய பாபமதே பகையாம்
எண்ணி யிவையுணர் புண்ணியர்க்கே செந்தில்
ஈசனின் நேசங் கை கூடுமடி

6. சரவண பவவென்று சந்ததஞ் சிந்தித்துத்
தண்டமிழ்க் கவிபாடுந் தொண்டுப்பித்து
வரகவி சுப்பிரமண்ய னுக்குத் தந்த
வைபவம் பாடிக் கை கொட்டுங்கடி.

நோண்டிச்சிந்து

ஓம்-சரவண பவவென்போம்-அவன்-தடங் கருணைக்கடல் படிந்தெழுவோம், ஹர ஹர சிவவென்போம்-தூய—அறநெறி தவரு நிலையில் நிற்போம், குகமய மெங்குமென்போம்-அவன்-கோகனகப்பத மலர் முடிப்போம், திகழ்வடி வேல் நினைப்போம் - வஞ்சத் - திருடா மைம்புலப் பகையழிப்போம், குமர குருவென்போம்-மேவும்-குறைக ணீங்கக்கை குவித்திடுவோம்-அமர சகாயவென்போம்-சத்திய-ஆனந்த ரூப நிலையில் நிற்போம், சிவஷண்முகவென்போம்-தூய—சிந்தனை யவனுக்குத் தந்தவன்பால், தவமதி தனைப்பெறுவோம்-வெய்ய—ஜனன மரணபய மதைக் கடப்போம்; வரகவி சுப்ரமண்யன்-தந்த-வண்ணத் தமிழ்க் கவி பாடிடுவோம்—பரமசுகம்பெறுவோம்-இந்த—பாக்ய

மெமக்கருள் பரமனேயே-சரவண பவவென்போம்-ஓம்-
சரவண பவவென்போம்.

வாழ்க செந்தமிழ் வாழ்க நானிலம்
வாழ்க மெய்மறை வாழ்க கோமுறை
வாழ்க ஞானியர் வாழ்க மேலவர்
வாழ்க மாமயில் வாகனன் வாழ்கவே.

ஸ்ரீ சிவ சுப்ரமண்யர் நாமாவளி.

காப்பு.

தும்பி மாமுக னம்பொன் சீரடி
நம்பு வார்க்கிலை துன்ப மென்றுமே

நாமாவளி.

ஸ்ரீஜயசீல விநாயகனே
தேவர்தொழுந் தெய்வநாயகனே

நாமாவளி. (திருமால்)

கோவிந்தமாதவ நமோநமோ—
கோபாலகேசவ நமோநமோ

நாமாவளி. (குரு)

சற்குருதிருவடி பிடித்திடுவோம்—
சஞ்சிதவல்வினை மடித்திடுவோம்

1. சரவணபவனே பரதெய்வம்—தரணியி
லவனே மெய்த்தெய்வம்.
2. பக்தர்க்கிரங்கும் விசுவாசன்—பழனிப்பதி
வாழ் முருகேசன்.

3. முருகன் திருவடி தரிசனமே—முத்திக்
கொருதுணை யறிமனமே.

4. சரவணபவகுக வென வருமே—சத்திய
ஞானத் திருவுளமே.

5. பவப்பிணி யொழித்திடு மருந்துண்டு—அது
பன்னிரு திருக்கரன் திருத்தொண்டு.

6. கதிர் வடிவேலன் திருவடியே—கதிதரும்
துணையதை நீ பிடியே.

7. வாழ்வினைப் பொய்யென மதிமனமே—
மயிலனைமெய்யெனத் துதி தினமே.

8. ஒருதர முருகன் றுதிபடித்து—
ஓடிடு மனத்தை வழிப்படுத்து.

9. சீரலையாய் வரு தேசிகனே—சூரலைவாய்
வள்ளி நாயகனே.

10. சூர ஸம்ஹாரவை வேலவனே—வீர
மயூர கோலாகலனே.

11. சங்கரனுதல் வளர் கண்மணியே—எங்களை
யடிமைகொள் சண்முகனே.

12. மரகத மயின்மிசை வருமுருகா—
முராஹரி தனக்கொரு திருமருகா.

13. அறுமுகன் திருவடி மலர்மறவோம்
அவனியிலே யினி யாம் பிறவோம்.

14. அரகா முருகா வெனத் தொழுவோம்
அளவிலா நந்தத் துடனெழுவோம்.

15. கந்தனை வந்தனை செய்யுங்கள்
சிந்தனை யவனடி வையுங்கள்.

16. வேலாயுதனை வேண்டுங்கள்
வெய்ய பிறவியைத் தாண்டுங்கள்.

17. வடிவேலா வடிவேலா
வள்ளி மணாளா வடிவேலா.

18. குமரேசா குமரேசா
குஞ்சரிநேசா குமரேசா.

19. முருகேசா முருகேசா
முகுந்தன் மருகா முருகேசா.

20. பார்புகழ் பழனி மலைவிளக்கே
பக்திசெய் அன்பர் மனக்களிப்பே.

21. திருப்பரங் குன்றச் செங்கரும்பே
ஜெகமெங்கு மணக்கும் திருவரும்பே.

22. ஏரகமாமலை வேலவனே
தாரக மருளிய பாலகனே.

23. சரவண பவகுக நமோநமோ
ஹரஹர சிவசிவ நமோநமோ.

24. மாமயி லேறிய வேலவனே
மலைமக ளருளிய பாலகனே.

25. உமாமகேசனுக் கருள் குருவே
குமாரபுர மேவிய திருவே
26. இங்குமங்கு மெங்குமே
எங்கள் குகனருள் தங்குமே
27. நல்லார்க் கெளியவன் சிவகுருவே
அல்லார்க் கிலேயவன் திருவருளே.
28. சிவமலே யாண்டவன் திருவருளே
தேடி யடையத் தகுபொருளே.
29. கூர்வடி வேலனேக் கூறுவமே
கோபக் கொடுங்கன லாறுவமே.
30. கோழிக் கொடியோ னடியவரே
கும்பிடத் தகுநல் பெரியவரே
31. ஆரணந் துதிபுரி யறுமுகனே
நாரணன் மகிழ்திரு மருமகனே.
32. சிவகுரு நாதனே யேநம்பு — அவன்
திருவடி மலரிலே வையன்பு.
33. சரவணபவகுக சரவணபவகுக
சரவணபவகுக ஷண்முகனே.
திரிபுரதகனனுக் கருமறை யுரைதரும்
அரஹர சிவசிவ ஷண்முகனே
மரகத மயின்மிசை யடியவ ரிடர்கெட
வருமுரஹரிதிரு மருமகனே.

சேந்திலாண்டவன் திருவடிவாழ்க.